செ.வெ.எண்: 136 நாள்: 14.02.2020

**காவிரி-வைகை- குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு தமிழக பட்ஜெட்டில் ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு.**

**புதுக்கோட்டை உழவர் சந்தை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் விவசாயிகள், பொது மக்கள் இனிப்புகள் வழங்கி கொண்டாட்டம்.**

---

காவிரி-வைகை-குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டத்தை செயல்படுத்தும் வயில் இன்று நடைபெற்ற பட்ஜெட் கூட்டத்தில் தமிழக அரசு இத்திட்டத்திற்கு ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உழவர் சந்தை, பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் 100 ஆண்டு கால கனவுத்திட்டம் காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத்திட்டமாகும். வரலாற்று சிறப்பு மிக்க இத்திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.7,677 கோடி ஆகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 12 தாலுக்காக்களில் உள்ள சுமார் 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் இதன் மூலம் பயனடைய உள்ளது.

மேலும் இத்திட்டத்தால் காவிரி முதல் தெற்கு வெள்ளாறு வரை 119 கிலோ மீட்டர் துாரத்திற்கு கால்வாய் அமைத்து அதில் பெறப்படும் உபரி நீர் வினாடிக்கு 6,360 கன அடி வீதம் கொண்டு வரப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 760 கண்மாய்களுக்கு நீர் ஆதாரம் பெறுவதுடன் 20,249.26 ஹெக்டேர் இதன் பயனாக விவசாய நிலங்கள் பாசன வசதி பெற உள்ளது.

இத்தகைய சிறப்பு மிக்க காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு திட்டத்தை அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் சார்பில் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் 12.02.2020 அன்று மாபெரும் நன்றி அறிவிப்பு கூட்டம் நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில் விவசாயிகள் தமிழக அரசுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்ததுடன் இத்திட்டத்திற்கு நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரிலேயே நிதி ஒதுக்கீடு செய்யவும் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

அந்த வகையில் வரலாற்று சிறப்பு மிக்க காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு இன்று நடைபெற்ற தமிழக அரசின் பட்ஜெட் கூட்டத் தொடரில் முதற்கட்டமாக ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலம் முதல்நிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ததன் மூலம் திட்டப்பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளது.

இன்றைய பட்ஜெட்டில் உடனடியாக நிதி ஒதுக்கி அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி.திரு.கே.பழனிசாமி அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கும், இதற்கு பேருதவியாக இருந்து வரும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்களுக்கும் புதுக்கோட்டை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இன்றையதினம் பட்டாசு வெடித்து மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை கொண்டாடினார்கள்.

குறிப்பாக உழவர் பெருமக்கள் அதிகம் கூடும் இடமான உழவர்சந்தையில் இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியை கொண்டாடினர். மேலும் அண்ணாசிலை, எம்.ஜி.ஆர்.சிலை, புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம், விராலிமலை, கீரனூர், அறந்தாங்கி, ஆலங்குடி, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் பட்டாசு வெடித்தும், பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர். மேலும் இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த உள்ள தமிழக அரசுக்கு தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**